( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்**
**தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-13


# வினாத்தாள் - I


சுட்டெண்:- ........................................


நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) ஒரு நபருக்குச் சொந்தமான இரு கைகளையும் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(02)  எனின்,  ற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 


(03)

| | | |
|---|---|---|
| 8 | 4 | 6 |
| 3 | A | 9 |
| 5 | B | 7 |

பின்வரும் பிரசினத்தில் A, B ஆகிய கூடுகளுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.


(1) 3, 1 (2) 2, 2 (3) 2, 1


(04) கீழே காணப்படும் A, B ஆகிய இரு உருக்களுக்கிடையே ஏதோவொரு தொடர்புண்டு. அதன்படி, C உருவுடன் அத்தகைய தொடர்பைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.




A B C


(1) 


(2) 

(3) 

(05) கீழே தரப்பட்டுள்ள மூன்று உருக்களுள் இரண்டு உருக்கள் ஏதோவொரு வகையில் ஒத்துள்ளன. அதன்படி, வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 


(06) ரூபாய் 5914 / 70 பெறுமதியான ஈருருளியொன்றின் விலை THAM / SL எனும் குறியீடுகளால் காட்டப்பட்டிருந்தது. பந்தொன்றின் விலை BZ / KN எனும் குறியீடுகளால் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, பந்தின் விலையாக இருக்கக்கூடியது,

(1) 42 / 35 (2) 91 / 50 (3) 62 / 83

(07) 

பிள்ளையின் நிழல் விழுந்துள்ள முறைப்படி, பிள்ளை பயணிப்பது,

(1) மு.ப 7.00 மணிக்கு கிழக்குத் திசையிலாகும்.
(2) பி.ப 5.00 மணிக்கு கிழக்குத் திசையிலாகும்.
(3) மு.ப 7.00 மணிக்கு வடக்குத் திசையிலாகும்.

(08) 


இக்பால், கணேஷ் ஆகிய இருவரும் P எனும் இடத்திலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள திசைகளுக்கு வட்டத்தினூடே ஓடினார்கள். இருவரும் சமனான வேகத்தில் ஓடினார்கள். அதன்படி, இருவரும் சந்திக்கக்கூடியது,

(1) R இல் (2) Q இல் (3) S இல்

(09) சிவலிங்கம் சச்சினின் தந்தையாவார். ராணியின் அண்ணன் சச்சின் ஆவார். குமார் சிவலிங்கத்தின் ஒரே அண்ணன் ஆவார். அதன்படி, குமார் ராணியின்,


(1) பெரியப்பா (2) சித்தப்பா (3) மாமா

kalvi.lk

(10) பெட்டியொன்றினுள் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய ஒவ்வொரு நிறத்திலும் ஒரு சோடிச் செருப்பு வீதம் மூன்று சோடிச் செருப்புகள் இருந்தன. பிள்ளையொன்று இரு கண்களையும் மூடிக்கொண்டு ஒவ்வொரு செருப்பு வீதம் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தால் அப்பிள்ளைக்கு நிச்சயமாக மஞ்சள் நிறம் அல்லது சிவப்பு நிற செருப்பு கிடைப்பது,

(1) இரண்டாம் சந்தர்ப்பத்தில் (2) மூன்றாம் சந்தர்ப்பத்தில் (3) நான்காம் சந்தர்ப்பத்தில்

(11) பொருட்கள் சிலவற்றின் விலைகளின் கூட்டுத்தொகையை கீழேயுள்ள உருக்கள் காட்டுகின்றன.





மேலேயுள்ள விபரங்களின்படி, பையொன்றின் விலை,

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 150.00 (3) ரூபாய் 100.00

(12) ஒரு வகுப்பில் உள்ள பிள்ளைகளை ஒரு குழுவிற்கு 6 பேர் வீதம் பிரித்தால் இறுதிக் குழுவை அமைக்க நான்கு பிள்ளைகள் குறைவாகக் காணப்படுவர். அதன்படி, அவ்வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 40 (2) 34 (3) 26

(13)




இவ்வுருவின்படி, குட்டையான ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 4 (3) 10

(14) "நான் இரவில் பிரகாசிப்பேன். மாதத்திற்கு ஒருமுறை எனது முகத்தைப் பூரணமாகக் காண முடியும். சிறு பிள்ளைகள் என்னில் அதிகம் விருப்பம் காட்டுவர். கவிஞர்கள் என்னைப்பற்றி அதிக கவிதைகள் எழுதியுள்ளனர்." நான் யார்?

(1) சூரியன் (2) மின்மினிப்பூச்சி (3) சந்திரன்


(15) "மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல" எனும் உவமைத் தொடரின் கருத்தை நன்கு விளக்கும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) துன்பத்திலிருக்கும் ஒருவருக்கு இன்னொருவர் உதவி வழங்கல்.




(2) ஒரு துன்பத்தின்போது இன்னுமொரு துன்பம் ஏற்படல்.

(3) மரத்திற்கு ஏறும் முன் சுற்றி இருக்கும் விலங்குகளை தேடி அறிதல்.

(16)



தாயக்கட்டை ஒன்றை இரண்டு திசைகளில் இருந்து பார்க்கும்போது தோன்றும் முறை இவ்வுருக்களில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இத்தாயக்கட்டையை அம்புக்குறியினால் காட்டும் திசைக்கு ஒரு தடவை மாத்திரம் புரட்டும்போது மேற்பக்கத்தில் வரும் முகம்,

(1)  (2)  (3) 

(17) பின்வரும் வாக்கியத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்க.

எமது உடலைப் பாதுகாக்கவும் எமக்கு வரும் ...................... எதிர்க்கவும் நாம் ................ உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

(1) துன்பங்களை, செயற்கையான (2) நோய்களை, சத்துள்ள (3) சவால்களை, பெறுமதியான

(18) பின்வரும் கவிதையிலுள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

தாமரை ............................ பூத்துச் சிரிக்கும்
இலைமேல் ................................. முத்துக்கள் போன்று பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் .................................... அழகு

(1) காய், பூச்சிகள், கடலின் (2) இலை, நீர், வானத்தின் (3) மலர், நீர், குளத்தின்

(19) பிழையான உவமையைக் கொண்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) வீரன் நத்தையைப்போல் மிக வேகமாக ஓடினான்.

(2) இரவில் நட்சத்திரங்கள் இரத்தினக்கற்களைப்போல் பிரகாசிக்கின்றன.

(3) சிறு பிள்ளைகள் எறும்புக் கூட்டம்போல் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றனர்.


(20) **சமன் :- 2013 / 06 / 24** **ராஜா :- 2012 / 11 / 16** **மதீன் :- 2013 / 02 / 13** **மீனா :- 2012 / 09 / 30**


வகுப்பொன்றிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் மேலே காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிள்ளையினதும் பெயரைக் குறைந்த வயதிலிருந்து கூடிய வயது வரை எழுதினால் கிடைப்பது,

(1) மதீன் - சமன் - மீனா - ராஜா (2) சமன் - மதீன் - ராஜா - மீனா (3) மீனா - ராஜா - மதீன் - சமன்

kalvi.lk

(21) ரூபாய் 2.00, ரூபாய் 5.00 ஆகிய இரு நாணயக் குற்றிகள் சமனான தடவைகள் மேலே சுண்டிவிடப்பட்டன. ஒவ்வொரு நாணயக் குற்றியினதும் ஒரு பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை கீழேயுள்ள வரைபுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன.




இவ்வரைபுகளின்படி, ரூபாய் 2.00 நாணயக் குற்றியின் B பக்கம் மற்றும் ரூபாய் 5.00 நாணயக் குற்றியின் A பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகளை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) 6 மற்றும் 10 (2) 4 மற்றும் 6 (3) 10 மற்றும் 12

(22) நான் ஒரே பெறுமதியுடைய 5 நாணயத் தாள்களை வியாபாரியிடம் கொடுத்து ஒரு நாணயத் தாளை பெற்றுக்கொண்டேன். அதன்படி, நான் வியாபாரிக்கு கொடுத்த நாணயத் தாள் வகையாக இருக்கமுடியாதது,

(1) ரூபாய் 100.00 (2) ரூபாய் 500.00 (3) ரூபாய் 1000.00

(23) ஒரு வரிசையில் சுதர்ஷனுக்கு முன்னால் ஆறு பேர் இருந்தனர். ஆனந்தனுக்கு பின்னால் எட்டு பேர் இருந்தனர். வரிசையில் சுதர்ஷன் ஆனந்தனுக்கு முன்னால் இருந்தான். சுதர்ஷனுக்கும் ஆனந்தனுக்குமிடையில் ஐந்து பேர் இருந்தனர். அதன்படி, அவ்வரிசையில் இருந்தவர்களின் எண்ணிக்கை,

(1) 19 (2) 20 (3) 21

(24)

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 4 | 9 | 8 | |
| 2 | 6 | 6 | 12 | 10 |

இக்கூடுகளினுள்ளே இருக்கும் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதற்கேற்ப, வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

(1) 13 (2) 15 (3) 14

(25)





இன் பெறுமானம்,

(1) 7 (2) 8 (3) 6

(26) நாளொன்றின் சாதாரண கடிகார முகத்தின் நிமிட முள், மணி முள் ஆகியன சுற்றும் தடவைகளின் எண்ணிக்கைகளை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) 24 , 2 (2) 6 , 12 (3) 12 , 6

(27)




A பாத்திரத்தை முற்றாக நிரப்புவதற்கு B பாத்திரத்தினால் குறைந்தபட்சம் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

(1) 4 தடவைகள் (2) 8 தடவைகள் (3) 6 தடவைகள்

(28) என்னிடம் 6 நாணயக் குற்றிகள் உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 34.00 ஆகும். அதன்படி, என்னிடமுள்ள நாணய வகைகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ரூபாய் 10.00, ரூபாய் 5.00, ரூபாய் 1.00 (2) ரூபாய் 10.00, ரூபாய் 5.00, ரூபாய் 2.00

(3) ரூபாய் 5.00, ரூபாய் 2.00, ரூபாய் 1.00

(29) பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - வாகனங்களில் வந்தவர்கள் மரத்தை வெட்டி நீக்கினார்கள்.

B - பிரதான வீதியில் பெரிய மரமொன்று முறிந்து விழுந்தது. C - மீண்டும் வீதியில் வாகனங்கள் செல்ல முடிந்தது.

D - மழையுடன் காற்று வேகமாக வீசியது. E - வீதியில் வாகனங்கள் செல்ல முடியவில்லை.

(1) C, B, D, A, E (2) D, A, B, E, C (3) D, B, E, A, C

(30)

| மாவட்டங்கள் | B | ஆறுகள் |
|---|---|---|
| நுவரெலியா | ஊவா | மகாவலி |
| A | மேல் | C |


இவ்வட்டவணையில் A, B, C ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே,

(1) அநுராதபுரம் - மாகாணங்கள் - வளவ (3) மன்னார் - திசைகள் - விக்டோரியா

(2) நீர்கொழும்பு - மாகாணங்கள் - சிவனொளிபாத மலை

kalvi.lk

(31)




இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்,

(1) 5 (2) 6 (3) 3

(32) புகையிரதத்திற்கு 6 கிலோமீற்றர் தூண்களைக் கடந்து செல்வதற்கு 30 நிமிடங்கள் எடுத்தது. அதன்படி, இப்புகையிரதத்திற்கு இரண்டு கிலோமீற்றர் தூண்களைக் கடந்து செல்வதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்?

(1) 5 நிமிடங்கள் (2) 10 நிமிடங்கள் (3) 6 நிமிடங்கள்

(33) மின்குமிழ் கோர்வையொன்றில் மஞ்சள், சிவப்பு, பச்சை, மஞ்சள், சிவப்பு, ...... என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதிலுள்ள சிவப்பு நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை 9 ஆகும். பச்சை நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை 8 ஆகும். அதன்படி, இம்மின்குமிழ் கோர்வையிலுள்ள மொத்த மின்குமிழ்களின் எண்ணிக்கை,

(1) 26 (2) 17 (3) 27

(34) பேருந்து ஒன்றில் இருவர் அமரத்தக்க 8 ஆசனங்களும், மூவர் அமரத்தக்க 6 ஆசனங்களும், ஐவர் அமரத்தக்க 2 ஆசனங்களும் உள்ளன. இப்பேருந்தில் 49 பயணிகள் ஏறினார்கள். அதன்படி, பேருந்தில் நின்றுகொண்டிருந்த பயணிகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 4


(35) பிள்ளையொன்று 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதியுள்ளது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இங்குள்ள இலக்கம் 1 இன் எண்ணிக்கையும் இலக்கம் 0 இன் எண்ணிக்கையும் சமனாகும்.

(2) இங்குள்ள இலக்கம் 1 இன் எண்ணிக்கை, இலக்கம் 0 இன் எண்ணிக்கையை விட குறைவாகும்.

(3) இங்குள்ள இலக்கம் 1 இன் எண்ணிக்கை, இலக்கம் 0 இன் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

(36)




இப்பெரிய சதுரமுகி ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெரிய சதுரமுகியிலுள்ள நிழற்றப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகள் அகற்றப்பட்டன. அதன்படி, அகற்றப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 11 (2) 8 (3) 10


(37) ஒரு பண்ணையிலுள்ள கோழிகளின் மொத்த கால்களின் எண்ணிக்கை இங்குள்ள மாடுகளின் மொத்த கால்களின் எண்ணிக்கையைப்போல இரு மடங்காகும். அதன்படி, பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை இங்குள்ள மாடுகளின் எண்ணிக்கையைப்போல,

(1) இரு மடங்காகும். (2) மூன்று மடங்காகும். (3) நான்கு மடங்காகும்.


(38) ஒரு ஊடுபுகும் தாளில் வரையப்பட்ட இவ்வுருவை புள்ளிக்கோட்டின் வழியே மடிக்கும்போது புலப்படும் உரு,




(1)




(2)



(3)




(39)




இச்சக்கரத்தைச் சுற்றும்போது D இற்கு முன்னால் P நின்றது எனின், அப்போது H இற்கு முன்னால் உள்ள எழுத்து,

(1) T (2) U (3) S

(40) ஒரு சைக்கிள் ஓட்டப் போட்டியில் போட்டியாளர்கள் பயணம் செய்த பாதையை கீழேயுள்ள உரு காட்டுகின்றது. போட்டியாளர்கள் பயணம் செய்த பாதையின் அனைத்து சந்தியிலும் வலதுப் பக்கம் திரும்புக அல்லது இடதுப் பக்கம் திரும்புக ஆகிய அறிவித்தல்கள் இடப்பட்டிருந்தன.




உருவின்படி, அப்பாதையில் "வலதுப் பக்கம் திரும்புக" எனும் அறிவித்தல் எத்தனை இடங்களில் இடப்பட்டிருந்தன?

(1) 8 (2) 9 (3) 10

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-13

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

(i) இப்பாடலில் இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல்லை எழுதுக. ..........................................................

(ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை பெண்பாற் பெயர்ச்சொல்லை எழுதுக. ..........................................................

(iii) "புதுமை" என்ற சொல்லைக் குறிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக ..........................................................

(iv) கதிரவனைக் கண்டதும் மலரும் மலர் எது? ..........................................................

(v) இப்பாடலில் கூறப்படும் பொழுதுயாதாக இருக்கும் ? ..........................................................

**(02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

வளர்ந்துள்ள / பாதையோரத்தில் / மாடு / புல்லை / மேய்ந்தது

..........................................................

Education கல்வி

**(03) பின்வரும் ஒவ்வொரு வினாவினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) அம்மா தம்பிக்குச் சட்டை வாங்குவதற்காகக் கடைக்குச் .................... ( சென்றது , சென்றார் , சென்றோம் )

(ii) கடற்கரையில் சிறுவர்கள் கூடி விளையாடிக் ....................( கொண்டிருந்தார்கள் , கொண்டிருந்தான் , கொண்டிருந்தன )

(iii) பேருந்து தரிப்பிடத்தில் பயணிகள் தரித்து .................... ( நின்றாள் , நின்றான் , நின்றனர் )

**(04) பின்வரும் சொற்களை அகர வரிசைப்படி மீண்டும் எழுதுக.**

ஈட்டி , ஏழு , ஆசிரியர் , ஊர் , ஒலி :- ..........................................................

**(05) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.**

(i) இரை :- ..........................................................

(ii) இறை :- ..........................................................

**(06) சரியான எழுத்தைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

(i) பூஞ்சோ......... ( ழை / ளை / லை )

(ii) மி........கலம் ( ண் / ன் / ந் )

(iii) உ..........வுத்தொழில் ( ழ / ள / ல )

(iv) அ..........பவம் ( நு / ணு / னு )

**(07) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.**

* உழவன் வயலை உழுதான். * உழவன் நெல் விதைத்தான்.


..........................................................

**(08) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்திச் செய்க.**

(i) குன்றும் ..........................................................

(ii) உயர்வு ..........................................................

(09)



**பின்வரும் புதிரைப் பூரணப்படுத்துக.**


**இடமிருந்து வலம்**

1. "இனிப்பு" எனும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்.
2. காகம் கரையும் அதுபோல ஆடு ....................
4. "பாதகன்" எனும் சொல்லின் பெண்பாற் சொல்,

**மேலிருந்து கீழ்**

1. "மூங்கில்" எனும் தாவரத்தின் இளமைப் பெயர்.
3. "நூல்" எனும் சொல்லின் ஒத்தகருத்துச் சொல்.

kalvi.lk

(10) 


**இவ்வுருவில் அம்புக்குறிகளின் மூலம் காட்டப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களை எழுதுக.**

(i) .................................................... (iii) ....................................................

(ii) .................................................... (iv) ....................................................

**(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் வெற்றிடத்துக்குப் பொருத்தமானச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) Is it a .................. ( pen? / pens? ) (ii) What ............ ( are / is ) your name?

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Bend forward :- .................................................. (ii) Stand straight ;- ..................................................

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

நேரம் என்ன? :- ..................................................


**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

அம்ப கீயக் ஓனத? :- ..................................................

(15) “முப்பத்தைந்தாயிரத்து தொண்ணூற்று ஒன்பது” எனும் எண்ணிற்கு அடுத்து வரும் எண்ணை இலக்கத்தில் எழுதுக. .............

(16) கனவுரு ஒன்றின் விளிம்புகளின் நீளங்கள் முறையே 2cm, 3cm, 4cm ஆகும். அதன்படி, அக்கனவுருவின் விளிம்புகளின் மொத்த நீளம் எவ்வளவு? ..................................................

(17) தற்போதைய நேரம் பி.ப 3.00 மணிக்கு 10 நிமிடங்களாகும். அதன்படி, 3 கழிந்து 35 நிமிடங்கள் ஆவதற்கு இன்னும் எத்தனை நிமிடங்கள் உள்ளன? ..................................................

(18) 


இங்கு A, B ஆகிய அம்புக்குறிகளினால் காட்டப்படும் திசைகளை எழுதுக.


A :- .................................................. B :- ..................................................

(19) (i) வாழைப்பழமொன்றின் விலை ரூபாய் 8.50 ஆகும். அதன்படி, 4 வாழைப்பழங்களின் விலை யாது? ..........................

(ii) 4 ரம்புட்டான் பழங்களைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 50.00 நாணயத் தாளைக் கொடுத்தபோது ரூபாய் 26.00 மீதியாகக் கிடைத்தது. அதன்படி, ரம்புட்டான் பழமொன்றின் விலை யாது? ..........................


(20) ஓர் எண்ணை 8 இனால் வகுக்கும்போது விடை 3 ஆகும். அதன்படி, அவ்வெண்ணை 4 இனால் வகுக்கும்போது கிடைக்கும் விடை யாது? ............................

(21) தற்போது நேரம் பி.ப 4.40 மணியாகும். அதன்படி, இன்னும் 30 நிமிடங்களுக்கு முன்னான நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. ..................................................

(22) 


இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுவட்டத்தினுள்ளேயே எழுதுக.

(23) ☐ − ☐ = VII இவ்வெற்றுக்கூடுகள் இரண்டிற்கும் பொருத்தமான 20 இற்கும் குறைந்த உரோம எண்குறிகள் இரண்டினை வெற்றுக்கூடுகளினுள்ளேயே எழுதுக.

(24) 


100m ஓட்டப் போட்டியொன்றை நிறைவு செய்வதற்கு 4 போட்டியாளர்கள் எடுத்த நேரங்களைப் இவ்வரைபு காட்டுகின்றது. இவ்வரைபிற்கேற்ப, ஓட்டப் போட்டியில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்களின் பெயர்களை ஒழுங்குமுறையாக எழுதுக.

..................................................

kalvi.lk

சுட்டெண்:-...................................

(25) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து வெற்றிடங்களில் எழுதுக.

( நான்முகி , சதுரமுகி , உருளை , கனவுரு )


**(i)** 12 விளிம்புகளும் 8 உச்சிகளும் உள்ள திண்மங்களை எழுதுக. ..........................................................................

**(ii)** இரு வட்ட முகங்கள் உள்ள திண்மம் எது? ..........................................................................

**(iii)** முக்கோண முகங்கள் மாத்திரம் உள்ள திண்மம் எது? ..........................................................................

(26) ஒரு வியாபாரியிடம் 36 மாம்பழங்கள் உள்ளன. அவர் அதில் $\frac{3}{4}$ ஐ விற்றார். அதன்படி, அவரிடம் எஞ்சியுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..........................................


(27)




இவ்வட்டத்திலுள்ள ஐந்து எண்களையும் பயன்படுத்தி 25000 இற்கும் 30000 இற்கும் இடைப்பட்ட மூன்று எண்களை எழுதுக. ........................................ ........................................ ........................................

(28) 2, 6, 18, 54, [ ] இவ்வெண் கோலத்தில் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூட்டினுள்ளேயே எழுதுக.

(29)




இக்கனவுருவின்,

**(i)** திட்டத்தின் நீளம், அகலம் ஆகியவற்றை எழுதுக

நீளம் :- ........................................ அகலம் :- ........................................

**(ii)** பக்கத் தோற்றத்தின் நீளம், அகலம் ஆகியவற்றை எழுதுக.

நீளம் :- ........................................ அகலம் :- ........................................

**(iii)** முற்புறத் தோற்றத்தின் நீளம், அகலம் ஆகியவற்றை எழுதுக.

நீளம் :- ........................................ அகலம் :- ........................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) இலங்கையிலுள்ள மிகப் பெரிய குளம்,
(1) கந்தளாய்க் குளம் (2) கலா வாவி (3) சேனாநாயக்க சமுத்திரம்

(31) மூளையை அதிகமாக களைப்படைய வைக்கும் விளையாட்டுக்கள்,
(1) சதுரங்கம், டாம் இழுத்தல் (2) பாரம் தூக்குதல், வொலிபோல் (3) கரம், மேசைப்பந்து

(32) பறக்கும் முள்ளந்தண்டுள்ள விலங்கு ஆனால் பறவையல்ல. அது என்ன?
(1) பருந்து (2) மரங்கொத்தி (3) வௌவால்

(33) நின்றுகொண்டு உறங்கும் விலங்குகள்,
(1) யானை, குதிரை (2) அணில், பூனை (3) நாய், முயல்

(34) இலைகளில் பூக்கள் பூக்கும் தாவரம்,
(1) செவ்வரத்தை (2) கடுபுல் (3) மல்லிகை

(35) பிரதான வீதிகளில் நடந்துப் பயணிக்கும்போது நாம் செய்யத்தகாதது,
(1) இரவு நேரங்களில் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து பிரதான வீதிகளில் நடந்துப் பயணித்தல்.
(2) வீதியின் வலதுப் பக்கமாக நடந்துப் பயணித்தல். (3) வீதியில் கூட்டமாக நடந்துப் பயணித்தல்.

(36) தாவரவியற் பூங்காக்கள் அமைந்துள்ள இடங்கள்,
(1) ஹக்கல, பேராதெனிய (2) கட்டுநாயக்க, மத்தள (3) மல்வானை, வாழைச்சேனை

(37) கிழங்குகளைத் தோன்றி உண்ணும் பிராணிகள்,
(1) ஆடு, அணில் (2) முள்ளம்பன்றி, பெருச்சாளி (3) நத்தை, ஆமை

(38) குறித்த இடமொன்றில் மண் கறுப்பு நிறத்தில் காணப்பட்டால் நாம் அறிந்துகொள்ளக்கூடியது,
(1) அவ்விடத்தில் மணல் மண் உள்ளது என்பதாகும்.
(2) அவ்விடத்தில் மண்ணரிப்பு ஏற்படும் என்பதாகும். (3) அவ்விடத்தில் வளமான மண் உள்ளது என்பதாகும்.

(39) வித்தை சுற்றி நார்கள் அமைந்துள்ள வித்து,
(1) ரம்புட்டான் (2) அம்பரல்லா (3) வெரலு

(40) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறுவது,
(1) 4 வருடங்களுக்கு ஒரு தடவை (2) 3 வருடங்களுக்கு ஒரு தடவை (3) 2 வருடங்களுக்கு ஒரு தடவை

(41) கப்பல், தோணி முதலியவற்றை நிறுத்தி வைக்க பயன்படுத்தப்படும் உபகரணம்,
(1) கரப்பு (2) நாம்புவ (3) நங்கூரம்

kalvi.lk

(42) தூரியன் பூக்களை நாடிவரும் பிராணி,
(1) வௌவால் (2) குரங்கு (3) வெட்டுக்கிளி

(43) ஓட்டினுள் வாழும் பிராணிகள் அல்லாதது,
(1) ஆமை, சிப்பி (2) நண்டு, தேள் (3) நத்தை, கடலாமை

(44) களனி, களு ஆகிய நதிகள் கடலில் சேரும் இடங்கள் முறையே,
(1) கொழும்பு, களுத்துறை (2) நீர்கொழும்பு, மட்டக்களப்பு (3) காலி, திருகோணமலை

(45) மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு நிர்மாணிப்பு,
(1) காற்றுத் திசைகாட்டி (2) ஊசித்துளைக் கமரா (3) மின்மணி

(46) பின்வரும் உணவுப் பொருட்களுள் உற்பத்தித் திகதிக்கும் கலாவதித் திகதிக்குமிடையே கூடுதலான காலத்தைக் கொண்ட உணவு வகை,
(1) யோகட் (2) டின்மீன் (3) தயிர்

(47)

இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்பு,
(1) சந்திரவட்டக்கல் (2) காவற்சிலை (3) தாமரைக்குளம்

(48) அரச இலச்சினையில் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது,
(1) தர்மசக்கரம் (2) வாளேந்திய சிங்கம் (3) நிறைகுடம்

(49) முழு இலங்கைக்கும் விசேட விடுமுறை தினம் ஒன்றை அவசரமாக அறிவிப்பதற்கு மிகப் பொருத்தமான ஊடகம்,
(1) பத்திரிகை (2) ஒலிபெருக்கி (3) தொலைக்காட்சி

(50) நீராவியை பயன்படுத்தி தயாரிக்கப்படாத உணவு வகை,
(1) பிட்டு (2) அப்பம் (3) இடியப்பம்

(51) கடிதவுறை ஒன்றில் முத்திரையை ஒட்ட வேண்டியது கடிதவுறையின்,
(1) இடப்பக்க மேல் மூலையில் (2) வலப்பக்க கீழ் மூலையில் (3) வலப்பக்க மேல் மூலையில்

(52) மரங்களின் கிளைகளிலிருந்து நிலத்திற்கு வேர்கள் செல்லும் தாவரம்,
(1) ஆல மரம் (2) அரச மரம் (3) நாக மரம்

(53) வொலிபோல் விளையாட்டில் தமது குழுவிற்கு கிடைக்கும் பந்திற்கு அடிக்கக்கூடிய தடவைகளின் எண்ணிக்கை,
(1) 2 (2) 4 (3) 3

(54) வேலியொன்றில் கம்பித் தூண் ஒன்றை நடுவதற்காக குழியொன்றை தோண்டுவதற்கு மிகச் சிறந்த உபகரணம்,
(1) மண்வெட்டி (2) அலவாங்கு (3) கைமுள்ளு

(55) கீரை வகைகளை உணவாக உட்கொள்வதனால் எமது உடலுக்கு அதிகமாகக் கிடைப்பது,
(1) கனியுப்புக்கள் (2) புரதம் (3) மாப்பொருள்

(56) இரண்டு மூல வர்ணங்களைக் கலப்பதன் மூலம் அமைத்துக்கொள்ள முடியாத வர்ணம்,
(1) ஊதா (2) செம்மஞ்சள் (3) கபிலம்

(57) பிராணிகள் மூலம் பரம்பலடையும் வித்து அல்லாதது,
(1) மரமுந்திரிகை (2) எருக்கலை (3) கத்தாப்பு

(58) பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் தாவரம்,
(1) கெண்டித்தாவரம் (2) துளசி (3) சீதேவியார் செங்கழுநீர்

(59) இவ்விலச்சினை உரித்துடையது,
(1) இலங்கை மின்சார சபைக்கு (2) இலங்கை தபாற் திணைக்களத்திற்கு
(3) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு

**(60) "பூக்கள் பூத்துள்ள என்னுடைய வீட்டுத் தோட்டம் எவ்வளவு அழகானது?" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

(3) ..............................................................................................

kalvi.lk